சூலை - 2012


திருவள்ளுவர் ஆண்டு 2043

# செந்தமிழ்


தொகுதி : 56
பகுதி : 9

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



2012-13ம் கல்வி ஆண்டிற்கான முதலாமாண்டு மாணவர்களை வரவேற்று வாழ்த்தும் நிகழ்வு - 05.07.2012 அன்று செந்தமிழ்க் கல்லூரி பாண்டித்துரைத் தேவர் அருள் வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகத் திலகர் திடல் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் வே. சீனிவாசன் அவர்கள் கலந்து கொண்டார். உடன் செந்தமிழ்க் கல்லூரி செயலாளர் அவர்களும் தமிழ்ச்சங்கச் செயலாளர் அவர்களும் உள்ளனர்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 56
பகுதி : 9
சூலை 2012

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2043




| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

ஆசிரியர்
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சங்க காலத்து இசைக் கருவிகளும் வழிபாடும் | ஆதி. பாலசுந்தரன் | 4 |
| சேரமாதேவியர் குறித்த வாழ்த்தும் தாய்வழிச் சமூக எச்சமும் | வ. சேகர் | 10 |
| வள்ளலாரும் மனுச்சோழரும் | ப. வேல்முருகன் | 17 |
| தமிழ்த்தாய் விருது பெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கம் | புலவர் சி. பாண்டுரங்கன் | 22 |
| பேரறிஞர் அண்ணாவின் சுவையாடலில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்கள் | க. அன்பழகன் | 24 |
| திருப்புகழின்பம் (நான்கு வினாடிகள்) | ஆறுவிரல் ஐம்பொறி | 30 |
| வாழ்வோர் யார்? | கவிவேந்தர் கா.வேழவேந்தன் | 32 |
| பட்டதும் போதும்; கெட்டதும் போதும் | புலவர். சா. பன்னீர் செல்வம் | 33 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

இம் மாத இதழை சிறந்த இலக்கியக் கட்டுரைகளோடும், கவிதைகளோடும் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். அறிஞர் ஆதி. பாலசுந்தரன் அவர்களின் "சங்க காலத்து இசைக் கருவிகளும், வழிபாடும்' எனும் கட்டுரையில் பழந்தமிழர்களின் இசை ஞானம் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டு இருப்பதை அறிந்து மகிழ்கிறோம்.

பெண்பாலரை முதன்மைப்படுத்தி ஆண்பாலர் சேர்ந்து வாழ்தல் அக்காலச் சமூக மரபு என்பதை "சேரன்மாதேவியார் குறித்த வாழ்த்தும் தாய்வழிச் சமூக எச்சமும்" எனும் கட்டுரையில் வ. சேகர் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் திறம் பாராட்டுக்குரியது.

*வள்ளலாரின் உயிரிரக்கக் கோட்பாடும் திருவள்ளுவரின் தவத்தின் ஆற்றலும் மனுநீதிச் சோழனுடைய உயிரிரக்க வெளிப்பாட்டோடு வள்ளலாரும் மனுச்சோழரும் என்னும் கட்டுரை மிளிர்கிறது.*

பேரறிஞர்அண்ணா அவர்கள் ஒரு சகாப்தம்; திராவிட வரலாற்றில் எழுச்சிமிகு பக்கம்; இருளில் கிடைத்த நம்பிக்கைச் சுடர் என்பன போன்ற கருத்து வெளிப்பாடுகளை பேரறிஞர் அண்ணாவின் சுவையாடலில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்களாக க. அன்பழகன் அவர்கள் தந்துள்ளார்.

நாம் வெளியிடும் மூச்சுக்காற்றை நாசியின் மூலம் ஒருமுறை இழுத்து விடுவதற்கு நான்கு வினாடிகள் எடுத்துக் கொள்ள வேண்டும் எனும் கருத்தை திருப்புகழின்பமாக ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் தந்து மகிழ்விக்கிறார்.

தமிழ் மொழிநடை மூவகைப்பட்டது என்பதை நிறுவ புலவர் ச. பன்னீர்செல்வம் அவர்கள் "பட்டதும் போதும் கெட்டதும் போதும்" எனும் தலைப்பிட்டு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். மேலும் புலவர் சி. பாண்டுரங்கன், கவிவேந்தர் கா. வேழவேந்தன் ஆகியோரின் கவிதைகளோடு சூலை மாத இதழ் தங்கள் கைகளில் தவழ்கிறது.

**முனைவர் க. சின்னப்பா**

***இனி நீங்களும் இதழும்....***

# சங்க காலத்து இசைக் கருவிகளும் வழிபாடும்

(ஏப்ரல் மாத இதழ் தொடர்ச்சி)

ஆதி. பாலசுந்தரன்
சென்னை

## சங்க காலத்து இசைக் கருவிகளும் வழிபாடும்

குழலோடு ஒத்த சுரம் பேசி இசைக்கும் கருவி 'யாழ்' மட்டுமே. குழல்வேய்ங்குழல்."குழல் இனிது யாழ் இனிது" என்பார் வள்ளுவர்.

முதலில் ஐந்து சுரம்தான். குழலில் ஐந்து தொளைகள். யாழில் ஐந்து நரம்பு. பின்னர் ஏழு தொளை, ஏழு நரம்பு என மிகுந்தது. ஐந்து தொளைகளை உடைய குழலை இசைத்தால் மோகன ராகத்துக்கு உரிய சுரம் எழும். இவ்வாறு இசை இலக்கண வல்லார் கூறுவர். ஐந்து தொளைகளை உடைய குழலை, " கண்ணார் குழல்" எனப் பரிபாடல் கூறும்.

## புகுரி

"புகுரி" என்னும் இசைக் கருவி ஒன்று உண்டு. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழைமையானது. மூங்கிலால் ஆனது. மூன்றடி நீளம் உடையது. ஐந்து தொளை கொண்டது. சீவி விடப்பட்ட வாய்ப்பகுதியிலிருந்து ஊத வேண்டும். படுகர், இருளர், தோடர் இனத்தார் இசைக்கின்றனர். நீலகிரி, கோத்தகிரி, வால்பாறை, ஆனை மலை,தருமபுரி, கொல்லிமலை, குமரிமாவட்டம் இங்கெல்லாம் இப்போதும் பயன்பாட்டில் உள்ளது.

"கனைத்த மேதி காணாது ஆயன் கைம்மேல் குழல் ஊத, அனைத்தும் சென்று திரளும் சாரல் அண்ணாமலையாரே" என்பது சம்பந்தப் பெருமான் தேவார அடிகள். குழல் எழுப்பும் ஒலி கேட்டு, மேதி இனம், ஆயன் அருகில் கூட்டமாக வரும். திரும்பி வருவதற்கு ஏற்ற ஒலி. ஆனாய நாயனார் குழல் இசைக்கும் சிறப்பைச் சேக்கிழார் சுவாமிகள் விவரிக்கின்றார்.

## வட மொழி ஒப்பு

"மதுராபுரியில் வாழ்ந்த கண்ண பிரானின் வேய்ங்குழல் ஒலி, ஆநிரை மேயச் செல்வதற்கு ஒரு விதமாகவும், அவை திரும்பி வர வேறு ஒரு விதமாகவும் அவனால் இசைக்கப்படும்" என்னும் பாகவதச் செய்தியும் நினைக்கலாம்.

தமிழ் இலக்கியங்களில் 'சொல்லப்படுவதைப் போன்றே, வடமொழி நூல்களில், இசைக்குத் தொடர்பான சுரங்களை விவரிக்கும் இடத்தில், இசைக் கருவி சுரங்களின் ஒலிக்கும், மயில், கிரவுஞ்சப் பறவை, குயில், குதிரை, யானை, இவை எழுப்புகின்ற ஒலிக்கும் ஒற்றுமை உண்டு எனச் சொல்லப்படும் கருத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

## இசைக் கலைஞர் இசைக் கருவி இசைத்தல்

*"முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த*
*திரிபுரி நரம்பின் தீந்தொடை"* (பட்டினப்பாலை; அ. 253 - 254)

'இசைக் கருவிகளை முறைப்படி இசைப்பதில் பழுத்த பட்டறிவு வாய்ந்த இசை வல்லுநர்கள், கூத்தர்கள் அவர்கள் எழுப்பும் முழுவு ஓசையின் தாளத்துக்குப் பொருந்தி வரும் முறையில், யாழில், பாணர்கள் ஆற்றொழுக்காய் எழுப்புகின்ற இனிய இசை'..... இங்கே, கூத்தர்கள் எழுப்புகின்ற தாள ஓசைக்கு இயைந்து வரும் முறையில் பாணர்கள் யாழில் இன்னிசை எழுப்புகின்றனர். எனவே, தாளமும், இராகமும் ஒத்து எழுகின்றன.

## இசைக் கருவிகளின் சேர்ந்திசை

*"இமிழ் இசை அருவியோடு இன்னியம் கறங்க"*

(திருமுருகாற்றுப்படை - அ. 240)

மலையிலிருந்து கீழே பாய்ந்து செல்லும் அருவி எழுப்புகின்ற பேரொலியைப் போன்று, பல இன்னிசைக் கருவிகளும் ஒன்றாக இணைந்து தாள கதி தவறாமல் 'சுருதி சுத்தத்துடன்' கோயிலில் பூசை நடைபெறும் சமயத்தில் பேரொலி எழுப்புகின்றன.

## விழாவுக்கு முழா ஒலி

*"முழவு இமிழும் விழவு"* - (மதுரைக் காஞ்சி; அ. 327)

..... முழவு ஒலி முழக்கம் நெடுந்தொலைவில் சிற்றூர்களில் வசிப்பவர்களின் செவிகளிலும் கேட்கும் அளவுக்கு முழங்கும் ஆரவாரம் மிகுந்த திருவிழா... கோயிலில் திருவிழாத் தொடங்கி விட்டது என்பதற்கு அடையாளமாகத் திரு விழாச் சமயத்தில் முழவு பெருமுழக்கத்துடன் ஒலிக்கிறது.

## சினம் தணிக்க இசை

".........சென்னியர்
தெறல் அரும் கடவுள் முன்னர்ச் சீறியாழ்
நரம்பு இசைத் தன்ன" (நற்றிணை பா- 189)

'கடவுளின் சினத்தைத் தணிப்பதற்காகச் சீறியாழ்ப் பாணர்கள், அக்கடவுளின் முன்னால் சீறியாழை இசைத்து, சினம் தணிவித்ததைப் போன்று.... ' எனச் சொல்லப்படுவதால், கடவுளரின் சினத்தைத் தணிப்பதற்கு யாழ்ப்பாணர்கள் யாழ் வாசிப்பார்கள் எனத் தெரிகிறது.

சினத்தைத் தணிப்பதற்கு உதவும் பண் உண்டு. சினத்தைப் புலப்படுத்துவதற்கு, மகிழ்ச்சியைக் காட்டுவதற்கு, மன அமைதியை ஏற்படுத்துவதற்கு - இவ்வாறு பண்புகளைப் புலப்படுத்தும் விதத்தில் பண்கள் அமைந்துள்ளன.

அரசின் நடைமுறைச் செயற்பாடுகளில் ஏற்படும் தவறுகள், நாள் தோறும் நிகழும் ஆட்சி நிகழ்வுகளில் எழும் சிக்கல்கள் முதலியவற்றால் அரசனுக்குச் சினம் எழுவது இயல்பே. பகைத்திறன் காரணமாகவும் சினம் மிகுந்து எழும்.

## இசையும் நோய்த்தீர்வும்

சினம் காரணமாக எழும் நெருக்கடி, மன இறுக்கம் குருதி அழுத்தம் முதலியவற்றைக் குறைக்கவும், நரம்பு மண்டலம், உணர்வு மண்டலம்

ஆகியவை அமைதி பெறவும் அரசன் முன்னிலையில் பொருத்தமான பண்களுடன் இசை பாடினர். இசைக்கருவிகளை இசைத்தனர் இசைவாணர்கள்.

இந்த இசைக்கருவிகள் எல்லாம் நமது பண்பாட்டு வளர்ச்சியின் மரபுரிமைச் சின்னங்கள்.

## சூதர் - மாகதர்

அரண்மனையில் அரசனைத் துயிலுமாறு செய்வதற்கும், துயில் எழுப்புவதற்கும் இசைவாணர் அமர்த்தப்பட்டிருந்தனர். அரண்மனையில் நின்று கொண்டுதான் சிலர் பாடவேண்டும். இவர்களுக்குச் "சூதர்" என்பது பதவிப் பெயர். அமர்ந்து பாடுவோர் "மாகதர்". மாகதர் இசைக்கருவி இசைத்துப் பாடுவோர்.

"கண்படை நிலை"; 'துயிலெடை நிலை' ஆகிய தொல்காப்பியர் கூற்றை அடிப்படையாகக் கொண்டே திருப்பள்ளி யெழுச்சிப்பாடல்கள் பாடப்பட்டன.

## பாணரும் கூத்தரும்

போர்க்களத்தில் அரசனுக்கும் வீரர்களுக்கும் ஏற்படுகிற மன நெருக்கடி, குருதி அழுத்தம் இவற்றைக் குறைப்பதற்காகவே பாணர்களும், கூத்தர்களும் தங்களின் கலைத்திறனைக் காட்டிடப் போர்க்களம் சென்றனர்; ஆடல் பாடல் நிகழ்த்தினர்.

இன்றும், போர் வீரர்களை மகிழ்விப்பதற்குப் போர்முனைக்குச் சென்று போர் வீரர்கள் முன்னிலையில் நட்சத்திரக் கலைவிழாக்கள் நடத்தப்படுவது நாம் அறிந்ததே.

வட இந்தியப் போர்க்களங்களில் முற்காலத்தில் அரசனுக்கு வெற்றி கிடைக்க வேண்டிப், புரோகிதர்கள் போர்க்களத்துக்குச் செல்லும் வழக்கம் உண்டு.

## பண்ணிசைச் சிறப்பு

பகற்பண், இராப்பண்,பொதுப்பண் எனவும், ஐவகை நிலங்களுக்கும் உரிய பண்கள் எனவும் வகைப்படுத்திப் பாடினர்.

"மந்திரமாவது" எனத் தொடங்கும் திரு நீற்றுப் பதிகத்தைத் திருஞானசம்பந்தப் பெருமான் பாடி, நின்ற சீர் நெடுமாற பாண்டிய மன்னனின் சுரநோயை - (முறைக் காய்ச்சல் - Typhoid) அறவே நீக்கிய தமிழோடிசைப் பெருமையை நாம் அறிவோம்.

"தமிழ் இசை, விழுமிய இசையினோடு ஒலி செலும் அடியவர் உறு துயர் இலரே" திருமங்கையாழ்வார் - எட்டாம் பத்து - ஏழாம் திருமொழி - இறுதிப்பாடல்) என, இசைபாடி இறைவனைத் தொழுதால் துன்பம் அடைய மாட்டார்கள் என்று தமிழிசையின் சிறப்பை நினைவு கூர்கிறார்.

## இசை இலக்கண வல்லுநர்

*"அதிர்குரல் வித்தகர் ஆக்கிய தாள*

*விதிகூட் டியவிய மென்னடை போல"* (பரிபாடல் : பா - 10 . அ.24, 25)

"இசையிலும் தாளத்திலும் சிறந்த இசை இலக்கண வல்லுநர்கள் தங்களின் கூர்த்தலய ஞானத்தால் தாள விதிகளை வகுத்துள்ளனர். அத்தாள விதிகளுக்கு இயையுமாறு சுதி சேர்க்கப்பட்ட இசைக் கருவிகளின் மென்மையான தாள கதியைப் போல..." எனச் சொல்லப்படுகிறது.

இசை வாணர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்ததைப் போல, இங்கே கூறப்பட்ட சான்றுகளிலிருந்து இராகத்திலும், தாளத்திலும் நுண்மாண் நுழைபுலம் மிக்க இசை இலக்கண வல்லுநர்களும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சிறந்த இசைக்கோலம் புனைந்தார்கள். இராகமும் தாளமும் பிழையா வண்ணம் ஒத்திசைத்து இசையமைத்துப் பாடுவதற்கு ஏற்ற முறையில் இசை இலக்கணம் வகுத்தார்கள். இவர்கள் விதித்த மரபுப் படியே நாயன்மார்கள்;

*"பண் ஒன்றே இசை பாடும் அடியார்கள்";*

*"தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணை*

*பண்ணி, நல்ல முழவம் மொந்தை மல்கு*
*பாடல் செய்கை, இடம் ஓவார்"*

என்றெல்லாம், பண், தாளம், இசைக் கருவிகளைப் பற்றிக் கூறுவது இங்கே நினைக்கத் தக்கது.

இருப்பினும் இசை பாடுவதில், "கோழைமிடறாகக் கவிகோளும் இலவாக இசை கூடும் வகையால்" எனச் சில குறைபாடுகளுடன் பாடினாலும், உள்ளன்புடன் பாடுவதால் இறைவன் உகப்பாய் ஏற்றுக் கொள்வான் எனவும் அடியார்கள் குறிப்பிடுகின்றனர்.

"பண் என்னாம் பாடற்கு இயைபு இன்றேல்" என்று தாளமும் இராகமும் ஒத்து இசைத்தலின் அவசியத்தை வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

## நிறைவுரை

சங்க காலத்தில் கடவுளின் திருமுன்னர், இன்னிசைக் கருவிகளை முறை பிறழாமல், பொருந்தும் முறையில் இசைத்து வழிபாடு செய்தனர், பண்ணிசை பிறழாது பாடிப்பரவினர் என்னும் செய்திகள் இச்சங்கச் செய்யுள் பகுதிகளால் தெரிய வருகின்றன. இதனால், அம்மக்களின் அமைதி நிறைந்த சமூக வாழ்வும், இசை உணர்வும் தெரிய வருகின்றன. காலம் மாறியது, சமுதாயம் மேலும் நாகரிகம் பெற்று வளர்ந்தது. சிந்தனைத் திறன் மிகுந்தது. யாழைக் காட்டிலும், பழைய அமைப்பினை உடைய வீணையைக்காட்டிலும் உருவில் சற்றே மாறுபட்ட வீணை என்னும் இசைக் கருவியை வடிவமைத்து இசை இசைத்தனர். தொடர்ந்து யாழ், வீணை இரண்டையுமே பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதை,

*"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்"*

என மணிவாசகர் பாடுவதாலும்,

*"பண்ணொடு யாழ்வீணை பயின்றாய் போற்றி!"*

எனத் திருநாவுக்கரசர் பாடுவதாலும் அறிகிறோம்.

பழைய மரபினை அடியொற்றித் திருக்கோயில்களில் யாழுடன் வீணையும் சேர்த்து இசைத்து வழிபட்டனர்.

# சேரமாதேவியர் குறித்த வாழ்த்தும் தாய்வழிச் சமூக எச்சமும்

வ. சேகர்
திருச்சிராப்பள்ளி

வாழ்த்து ஓர் இனத்தின் பண்பாட்டோடு கலந்த விடயமாகும். புலவர்கள் மன்னரை வாழ்த்தும்போது அவர்தம் மனைவியரையும் வாழ்த்துவது மரபு. இம்மரபினைப் பதிற்றுப்பத்து சேரவேந்தரோடு சேரமாதேவியரை வாழ்த்துவதில் பின்பற்றுகிறது. சேரமாதேவியரை வாழ்த்துவதற்கானச் சமூகப் பின்னணியைத் தாய்வழிச் சமூகக் கூறுகளுடன் பொருந்தும் பாங்கினையும் பெண்பாலர் குறித்த வாழ்த்தில் உரையாசிரியரின் கருத்துப்புலப்பாட்டினையும் ஆய்வதே இக்கட்டுரையின் நுவல்பொருளாகிறது.

## தாய்வழிச் சமூகம்

இனக்குழுச் சமூகத்தில் உணவு சேகரிப்பும் வேட்டையாடலும் முதன்மைத் தொழில்களாகும். இச்சமூகத்தில் தாய்த்தலைமைத் தன்மை பெறுகிறாள். "காட்டு மிராண்டிக் காலத்தில் குடும்ப அமைப்பு தோற்றம் பெறவில்லை. மந்தைக் கூட்டங்கள் போலவே மக்கள் வாழ்ந்தனர். தாயை மாத்திரமே பிள்ளைகள் அறிவர் தகப்பனை அறியாதிருந்தனர். இதனைத் தாய்வழிச் சமூக அமைப்பு" என்று மௌனகுரு கூற்றின் வாயிலாகப் பெண்களை மையமிட்டு அனைத்துச் செயல்களும் நடைபெற்றன என்பதை அறியலாம்.

வேளாண்மைச் சமூகம் ஆரம்ப நிலையில் பெண்களைப் பயிர்த்தொழிலில் ஈடுபடச்செய்தது. இச்சமூகத்தும் தாய்த்தலைமைத் தன்மை பெற்றிருந்தாள். ஆனால் வேளாண்மையில் மாடுகள் பயன்படுத்தப்பட்டபோது தாய்வழிச் சமூகம் தூக்கியெறியப்பட்டு தந்தைவழிச் சமூகமாக மாறியது. தந்தைவழிச் சமூகத்தில் குடும்ப அமைப்பும் அரசு உருவாக்கமும் தோற்றம் பெறலாயிற்று. அரசு உருவாக்கக் காலக்கட்டத்தில்

சங்க நூல்கள் தோன்றின. சங்க காலத்தில் தந்தைவழிச் சமூகம் முதன்மை பெற்றாலும் தாய்வழிச் சமூகத்தின் எச்சமாகச் சில கூறுகள் தொடர்ந்தன. இதனைப் பதிற்றுப்பத்தின் வாயிலாக நிறுவலாம்.

இரண்டாம் பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் போற்றுகையில் 'அவனது தாயின் கருப்பை தூய்மையுடையதாகுக' என்று வாழ்த்தப்படுகிறது.

*"வயிறுமா சிலீயுரவ வீன்ற தாயே"* (பதிற் : 20:28)

*சான்றோனைப்* பெற்ற வயிற்றினை மாசில்லாதாகுக என்று தாயினை வாழ்த்துதல் மரபு. சங்கச் சமூகம் பெண்மையைப் போற்றும் சமூகமாக இருந்துள்ளது. பெண்மையைப் போற்றும் தாய்வழிச் சமூகத்தின் தொடர்ச்சி என்பதை அவதானிக்கலாம்.

**தாய்த்தெய்வ வழிபாடு**

வேட்டைச் சமூகத்தில் தாய்த்தெய்வ வழிபாடு காணப்படுகிறது. கொற்றவை. காடுகிழாள் இச்சமூகத்தின் தெய்வங்களாகும். தமிழ்க் கடவுளான முருகனின் தாயாகக் கொற்றவையைத்" திருமுருகாற்றுப்படை குறிப்பிடுவதின் வழி தாய்த்தலைமைப் பண்பைப் பெற்றவளாகத் திகழ்ந்தாள் என்பதை அறியலாம். கொற்றவைக்கும் சிந்துவெளியில் கிடைத்துள்ள பெண்தெய்வத்திற்கும் தொடர்புடையது என்று பின்வரும் சான்று குறிப்பிடுகிறது.

"சிந்துவெளியில் கிடைத்துள்ள பெண்தெய்வத்திற்கும் கொற்றவை அம்மன் வழிபாட்டிற்கும் தொடர்பு உண்டு எனக் கருதுவர் ஜான் மார்ஷல் கூறுவதாக க. ப.அறவாணன் குறிப்பிடுகிறார்.

தமிழரின் மரபுவழித் தெய்வமான கொற்றவை பிற்காலங்களில் ஆரியர் வருகையால் காளியாக மாறிற்று. தமிழர்கள் மழை, ஆறு, நிலம் என இயற்கையைத் தாயாக வழிபட்டனர். மழைக்காக மாரி அம்மனை வழிபடும் வழக்கம் சமூகத்தில் தொன்றுதொட்டு நிலவுகிறது. இக்காலங்களிலும் பழங்குடி மக்கள் மழைவேண்டி வழிபடும் சடங்குகளில் தாய்த்தெய்வ வழிபாடு நிலவுகிறது.

பதிற்றுப்பத்து சேரமாதேவியரை சில குணங்களால் தெய்வத்தோடு ஒப்பிடப்படுகிறது.

*"வேறுபடு திருவி னின்வழி வாழியர்"* (பதிற்:74:24)

சேரமாதேவியர் பிறப்பொன்றினால் திருமகளினின்றும் வேறுபட்டு குணத்தாலும் நலத்தாலும் ஒத்திருக்கின்றனர் என்று குறிப்பிடுவதை உணரலாம்.

சேரமாதேவியரின் கற்பின் திறத்தைக் குறிப்பிடுகையில்

*"காமர் கடவுளு மாளுங் கற்பிற்"* (பதிற்:65:9)

என்று கற்பின் மேன்மையை வலியுறுத்துகிறது.

கற்பின் திறத்தால் கண்ணகி தெய்வமாக வணங்கப்பட்டதைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. கண்ணகியின் வழிபாடு தாய்வழிச் சமூகத்தின் அடிப்படையில் அமைந்தது என்று பி.எல்.சாமி குறிப்பிடுகிறார்.

தாய்வழிச் சமூகம் கற்பின் மேன்மையை வலியுறுத்தியது. பெண்டிரைத் தெய்வமாகப் போற்றுவது தாய்த்தெய்வ வழியாட்டோடு தொடர்புடையதாகும்.

## அருந்ததி

சேரமாதேவியர் குறித்த வாழ்த்தில் கற்பு அதிகமாகப் போற்றப்பட்டுள்ளது. சேரமாதேவியர் கற்பின் திறத்திற்கும் தாய்வழிச் சமூகத்திற்குமிடையேயான உறவை ஆராயத்தக்கதாகும் என்ற ராஜ்கௌதமனின் கருத்திற்கு அரண் செய்யும் வகையில் பதிற்றுப்பத்தில் சான்றுகள் உள்ளன. கற்புடைப் பெண்டிரைத் தெய்வமாகப் போற்றிய சமூகம் கற்பின் திறத்தை அருந்ததியோடு ஒப்பிடுகிறது. இளங்கோவடிகள் கண்ணகியை அறிமுக நிலையில்

*"தீதிலா வடமீனின் றிறமிவ ளிறமென்றும்"* (சிலம்:1:27)

என்று அருந்ததியோடு ஒப்பிடுகிறார்.

சேரமாதேவியரையும் அருந்ததி மீனோடு ஒப்பிடப்படுவதைப் பின்வரும் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

*"மீனொடு புரையும் கற்பின்*
*வாணுத லரிவையொடு காண்வரப் பொலிந்தே"* (பதிற் : 89:19-20)

*"விசும்புவழங்கு மகளி ருள்ளுஞ் சிறந்த*
*செம்மீ னனையணின் றொன்னகர்ச் செல்வி"* (பதிற் : 31:27-28)

பெரும்பாணாற்றுப்படையில் கற்பினை அருந்ததியோடு ஒப்பிடுவதை

*"பெருநல் வானத்து வடவயின் விளங்கும்*
*சிறுமீன் புரையும் கற்பின்"* (பெரும்பாண் : 302-303)

என்ற சான்றின் வழி உணர்தலாகிறது.

வானில் விளங்கும் விண்மீன் தொகுதிகளில் அருந்ததியை மட்டும் கற்பிற்கு ஒப்பிடப்படுகிறது. அருந்ததி தமிழக மக்களுக்கு மட்டுமின்றி, தொல் சமூகங்கள் பலவற்றிலும் சிந்துவெளி நாகரிக சமூகத்திலும் விண்ணில் தெரிந்த (விண்) மீன் கூட்டங்களோடு மண்ணக மாந்தர் இயைபுபடுத்தப்பட்டுள்ளமை தெரிகிறது என ராஜ்கௌதமன் குறிப்பிடுகிறார்.

## பள்ளிப்படைக் கோயில்கள்

அரசமாதேவியர் இறந்தபின் அவர்களுக்குப் பள்ளிப்படைக் கோயில்கள் எழுப்பப்பட்டன. இக்கோயில்களில் வழிபாடு நடத்தப்படுகின்றன. இதைக் க.ப.அறவாணன்

"அரசமாதேவியர் இறந்துவிடுகிறபோது அவர்களுக்கு எழுப்பப்பெற்ற பள்ளிப்படைக் கோயில்கள் பிற்காலத்தில் வழிபடும் தலங்களாக மாறி உள்ளன. இதற்குச் சான்று திருக்குடந்தைக்குப் பக்கத்தில் உள்ள பட்டீஸ்வரத்தில் அமைந்திருக்கும் பஞ்சவன்மாதேவி கோயிலாகும். பஞ்சவன்மாதேவி இறந்தபிறகு அவள் நினைவில் எழுப்பப்பட்ட பள்ளிப்படையே இக்கோயில் என்பது அங்குள்ள கல்வெட்டுகளால் தெரிய வருகிறது என்று குறிப்பிடுகிறார்.

அம்மன் வழிபாடும் வாழ்ந்து இறந்த பெண்களின் நினைவு வழிபாடாகும். கண்ணகி தெய்வமாக்கப்பட்டதும் இந்தப் பின்புலத்திலாகும். ஆனால் சங்க இலக்கியங்களில் அரசமாதேவியர் இறந்தபின்பு கடவுளாக வழிபட்டதற்கானச் சான்றுகள் இடம்பெறவில்லை.

**சேரமன்னனின் பாடல்**

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை தன்மனைவி பெருங்கோப்பெண்டு இறந்து ஈமத்தீ மூட்டிய நிலையில்

*"யாங்கு பெரிதாயினு நோயள வெனைத்தே*
*உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்*
*கள்ளி போகிய களரியம் பறந்தலை*
*வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்*
*தோள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி*
*ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை*
*இன்னும் வாழ்வ லென்னிதன் பண்பே"* (புறம். 245)

அவள் மாயவும் யான் உயிர் வாழ்கின்றேன் என்று சேரமன்னன் மனைவியை நினைந்து வருந்திய பாடலால் சேரன் தன் மனைவி மீது கொண்ட உளப்பாங்கினையும் சமூகம் பெண்மைக் குறித்த மதிப்பினையும் அறிய இயலுகிறது.

சங்கப்பாடல்களில் வேந்தர்கள். குறுநில மன்னர்கள், வள்ளல்கள் போன்றோர் தம் மனைவியர் இறந்ததற்கு வருந்திப் பாடியதாகச் சான்றுகள் இல்லை. ஆனால் சேரமன்னர் மட்டும் தன் மனைவி இறந்ததற்கு வருந்திப் பாடுதல் தாய்வழிச் சமூகம் சூழலில் இப்பாடல் பாடியிருக்க வேண்டும் என்பது உய்த்துணரலாகிறது.

## பதிற்றுப்பத்துப் பாடல்களில் சேரமாதேவியர் பெயர் சுட்டப்பெறாமை

நாவலர் சோமசுந்தர பாரதியார் பதிற்றுப்பத்துப் பதிகங்களில் மட்டுமே சேரமாதேவியர் பெயர் சுட்டப்பெறுகிறது. பதிற்றுப்பத்துப் பாடல்களில் பெயர்

சுட்டப்படவில்லை என்ற கருத்தை நிறுவி தாய்வழிச் சமூகத்தை வலியுறுத்தும் அவர்,

"அச்சேரரைப் பாடும் புலவர் அப்பெண்டிரைச் சுட்டிப் பாராட்டும் பல இடங்களில் யாண்டேனும் இப்பெருமாட்டிகளுள் யார்பேரையாவது ஒரு புலவரேனும் சுட்டாமல் எல்லோரையுமே எல்லாப் புலவருமே மறந்துவிட்டு பிற்குறிப்பாகப் பதிகப்பாட்டுகளில் மட்டும் இவரை விதந்து கூறுவானேன்" என்று குறிப்பிடுகிறார்.

அரசவையில் சேரனும் சேரமாதேவியிடம் ஒருங்கிருந்தவழி முன்னிலையாக வாழ்த்தப்பட்டுள்ளனர் என்பதை பின்வரும் பாடலின் மூலமாக நிறுவலாம்.

*"திருமுகத் தலமரும் பெருமதர் மழைக்கண்*
*அலங்கிய காந்த ளிலங்குநீ ரழுவத்து*
*வேயுறழ் பணைத்தோ ளிவளோ*
*டாயிர வெள்ளம் வாழிய பலவே"* (பதிற்:21:35-38)

சேரமாதேவியை வாழ்த்தும்போது "இவளோ" என்ற சுட்டுச்சொல்லினைப் புலவர் கையாள்கிறார். முன்னிலையாக நின்று வாழ்த்தும்போது பெயரைச்சுட்டுதல் தேவையுமன்று. பதிற்றுப்பத்து தொகுத்தபோது பதிகங்கள் இயற்றப்பட்டனவாகும். அதனால் பதிகங்களில் மட்டும் சேரமாதேவியர் பெயர் இடம்பெற்றன. சேரமாதேவியரை முன்னிலையாக நின்று வாழ்த்தும் மரபினைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

## உரையாசிரியர் கருத்துப்புலப்பாடு

பெண்பாலர் குறித்த வாழ்த்தினை நச்சினார்க்கினியர் "மக்களுட் பெண்பாலைப் பாடுதல் சிறப்பின்மையின் செய்யாதீர் .......... ....... கணவ என்றார்போல சிறுபான்மை ஆண்மக்களோடு படுத்து பாடுப " என்று குறிப்பிடுகிறார்.

நச்சினார்க்கினியர் காலத்தில் தந்தைவழிச் சமூகம் மேலோங்கியிருந்ததால் மக்களுட் பெண்பாலரைப் பாடுதல் சிறப்பின்மை என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

சங்க காலத்தில் தாய்வழிச் சமூகத்தின் எச்சக் கூறுகள் நிலவிற்று. எனவே பெண்பாலரை முதன்மைப்படுத்தி ஆண்பாலோடு சேர்த்து வாழ்த்தும்போது மரபு பதிற்றுப்பத்தில் காணலாகிறது.

சேரமாதேவியர் குறித்த வாழ்த்தில் சேரமாதேவியின் கூந்தல், நகை, இன்மொழி, நோக்கு, நுதல், நடை, பணைத்தோள், இளமுலை, அல்குல் என வருணனைக் குறிப்புகளும் கற்பின் திறமும் என்கிற இருநிலைப்பாடு காணப்படுகின்றன.

*"வாணுதல் கணவ ........ .........."* (பதிற்:38:10)

*"கற்பிறை கொண்ட கமழுஞ் சுடர்நுதல்'* (பதிற்:70:15)

வருணனைக் குறிப்பும், கற்பும் என இருநிலைப்பாடு வாழ்த்தில் இடம்பெறுவதைக் காணலாம்.

## முடிவுரை

புலவர்கள் மன்னரை வாழ்த்தும்போது அவர்தம் மனைவியரையும் வாழ்த்துவது மரபு. இம்மரபினைப் பதிற்றுப்பத்து சேரவேந்தரோடு சேரமாதேவியரை வாழ்த்துவதில் பின்பற்றுகிறது. இயற்கையைத் தாயாகப் போற்றிய சமூகம் சேரரின் தாயாரைப் போற்றும் பாங்கில் அறியலாம். சேரமாதேவியரைத் தெய்வத்தோடு ஒப்பிடுவதும் பள்ளிப்படைக் கோயில்களில் பின்புலமும் தாய்த்தெய்வ வழிபாட்டுடனான தொடர்பைப் புலப்படுத்துகின்றது. பள்ளிப்படைக் கோயில்களின் பின்புல மரபை ஒட்டியே பெண் சிறுதெய்வங்கள் தொன்றுதொட்டு வழிபடுவதை அறியலாம். அரசவையில் அரசமாதேவியரை முன்னிலையாக நின்று புலவர் வாழ்த்தும் மரபைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. சேரர் தன் மனைவி சார்ந்த உளப்பாங்கினையும் சமூகத்தில் பெண்மை குறித்த மதிப்பினையும் சேரன் பாடிய பாடல் தெளிவுறுத்துகிறது. பெண்பாலரை முதன்மைப் படுத்தி ஆண்பாலோடு சேர்த்து வாழ்த்துதல் அக்காலச் சமூக மரபு எனத் தாய்வழிச் சமூகக் கூறுகள் சங்க காலத்தில் எச்சமாக தொடர்ந்தன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக நிறுவலாகிறது.

# வள்ளலாரும் மனுச்சோழரும்

ப. வேல்முருகன்
அண்ணாமலை நகர்

திருவருட் பிரகாச வள்ளலார் என் உலகவரால் அறியப்பெற்ற இராமலிங்கர் (1823-1874), பத்தொன்பதாம் நூற்றாண்டின் அருட்கவிஞராகவும், ஞானியாகவும், திகழ்ந்தவர். தமிழின் இனிமையையும், மனத்தால் அறிதற்கரிய நுண்பொருட்களையும் சொற்களில் புலப்பட வைக்கும் எளிமைத் திறத்தினையும் பெற்ற படைப்பாளியாகவும், விளங்குபவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடை இலக்கியத்தை வளர்த்தவர்களுள் முக்கியமானவராக வள்ளலார் கருதப்படுகிறார். மனு முறைகண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய இரண்டும் உரைநடை நூல்களுள் இதற்குச் சான்றாகத் திகழ்கின்றன.

சென்னை சாத்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டதற்கேற்ப இராமலிங்கர் மனு முறைகண்ட வாசகத்தை 1854 ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். இருபத்தைந்து வருடங்கள் கழித்து சீவகாருண்ய விளக்கம் (1879) என்னும் உயிரிரக்கக் கோட்பாடுகள் அடங்கிய நூலைப் படைத்துள்ளார் எனத் தெரிகிறது. உயிரிரக்கக் கோட்பாடுகளை வகுப்பதற்கு முன்னோட்டமாக மனு முறைகண்ட வாசகம் திகழ்கிறது எனலாம். இவ் வகையில் வள்ளலாரின் உயிரிரக்கக் கோட்பாடுகள் மனு முறைகண்ட வாசகத்தின் தலைமைக் கதை மாந்தராகிய மனுச்சோழனிடத்து வெளிப்படுவதை இக்கட்டுரை நோக்குகிறது.

**உயிர்நலம் பரவுக**

உயிருக்குள்ளேயே நாம் இருக்கிறோம். எமக்குள்ளே உயிர்கள் இருக்கின்றன. இதை உணர்ந்து உயிர்நலம் பரவுக என்று அருட்பெருஞ்சோதி ஆண்டவரே தமக்குக் கூறியதாக வள்ளலாரின் பின்வரும் அகவற்பா தெரிவிக்கின்றது.

*"உயிருள்யா மெம்மு ளுயிரிவை யுணர்ந்தே*
*உயிர்நலம் பரவுகென் றுரைத்தமெய்ச் சிவமே"*
(திருவருட்பா - அகவல் 973-74)

## உயிரிரக்கக் கோட்பாடு

உயிர்நலம் பரவுதலே வள்ளலாரின் தலையாயக் கொள்கை. இதை அடிப்படையாகக் கொண்டு சீவகாருண்ய ஒழுக்கம் எனும் நூலை விரிவாக எழுதியுள்ளார். தயவைக் கொண்டு தயவைப் பெறலாம்.என்பதைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

*"அருளென்பது கடவுள் தயவு, கடவுள் இயற்கை விளக்கம், சீவகருணிய மென்பது சீவர்கள் தயவு, சீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம், இதனால் தயவைக் கொண்டு தயவைப் பெறுதலும் கூடும். ஞானவழி என்பதும் சன்மார்க்கம் என்பதும் சீவகாருண்ய ஒழுக்கமே...... "*
(திருவருட்பா - உரைநடைப்பகுதி: ப. 145)

சீவகாருண்ய ஒழுக்கம் என்பது யாதெனின் உயிர்களுக்கு உயிர்கள் விடயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கமாகும். ஆன்ம உருக்கம் எப்பொழுது உண்டாகுமெனில், உயிர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துன்பத்தை அனுபவிக்கக் கண்டபோதும், கேட்டபோதும் உண்டாகும் என வள்ளலார் விளக்கிச் செல்கிறார்.

## பர சீவகாருண்யம் - அபர சீவகாருண்யம்

சீவகாருண்ய ஒழுக்கத்தில் அபர சீவகாருண்யம், பர சீவகாருண்யம் என இரண்டு வகையுள்ளதைப் பின்வருமாறு வள்ளலார் மொழிவதைக் காணலாம்.

"பசியினால் வருந் துன்பமுங் கொலையினால் வருந் துன்பமுஞ் தவிர மற்றவைகளால் வருந் துன்பங்களை மாற்றுவது அபர சீவகாருணிய மாதலால் இவ்வுலகை இன்பத்தைமாத்திரம் சிறிதுண்டு பண்ணுமென்றும், பசியினால் வருந்துன்பத்தையும்,

கொலையினால் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பர சீவகாருண்ய மாதலால் இவ்வுலக இன்பங்களையும் அளவிந்த சித்தியின்பங்களையும், எக்காலத்து மழியாக முத்தியின்பத்தையும் அருளாலடையப்படுமென்றும் அறிய வேண்டும்."

(திருவருட்பா - உரைநடைப்பகுதி, பக்; 152 - 153)

## வள்ளலாரின் மனுச்சோழன்

வள்ளலார் தாம் படைத்த மனு முறைகண்ட வாசகத்தில் பசுவின் கன்று அரசகுமாரன் வீதிவிடங்கனின் தேர்ச்சக்கரத்தில் சிக்கி இறந்துபடுகிறது. இதைக் கண்ணுற்ற தாய்ப்பசு பெருந்துயர் எய்துகிறது. மனுச்சோழனின் ஆராய்ச்சி மணியை ஒலிக்கச்செய்து நீதி கேட்கிறது. உண்மையை அறிந்த மனுச்சோழன் அப்பசுவின் துயரத்தைத் தன்னுடைய துயரமாகக் கொண்டு வருந்துகிறான். எட்டுணையும் பேதமுறாது எவ்வுயிரையும் தன்னுயிராக என்னும் மனுச்சோழன், சீவகொலை நேரிட்டது கண்டு துடித்துப் போகிறான். உயிரிரக்க வடிவமாக மனுச்சோழன் திகழ்கிறான். இவ்வகையில் வள்ளலாரின் உயிரிரக்கக் கோட்பாட்டின்படி மனுச்சோழனின் உயிரிரக்கம் பர சீவகாருண்ய வகையில் அடங்குவதை அறியலாம்.

### மனுச்சோழனும் அருள்வெளிப்பாடும்

கடவுள் விளக்கம் உயிரிடத்து வெளிப்படும் நிலையை வள்ளலார் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

"சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் - காருணியம் - உண்டாக உண்டாக அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டுப் பூரணமாக விளங்கும்."

(திருவருட்பா - உரைநடைப்பகுதி. ப.183)

இந்த வகையில் மனுச்சோழன் இறந்துபட்ட பசுங்கன்றை உயிர்ப்பித்து பசுவின் துயரத்தை நீக்கும் வழியைக் கண்டறிகிறான். கன்றை இழந்து தவிக்கும் பசுவின் துயரைத் தான் அடையவும், கன்று பெற்றுக் கொலைத் துன்பத்தைத் தன் மகன் வீதிவிடங்கன் அடையவும், முறை செய்ய முடிவெடுத்தான். இதன்படி மகனைத் தேரில் ஊர்ந்து முறை செய்யுமாறு தன்

அமைச்சனான கலாவல்லபனுக்கு ஆணையிடுகின்றான். அமைச்சனோ உயிரிரக்கமுடையவன். அரசகுமாரனைக் கொல்வதற்கு மனம் துணியாமையால் தன்னைத் தானே வாளால் வீழ்த்திக்கொண்டு இறந்துபடுகிறான்.

இதைக் கேள்வியுற்ற மனுச்சோழன் மிகவும் வருந்தி, தன்னால் அமைச்சனும் இறக்கநேரிட்டதே என்று துடித்துப் புலம்பினான். அமைச்சன் கலாவல்லபனையும் உயிர்ப்பிக்க வேண்டிய நிலைக்கு அரசன் தள்ளப்பட்டான். இறுதியில் தானே தேர் நடத்தி மகனைக் கொன்று முறைசெய்த பின், அமைச்சன் பெற்றத் துன்பத்தைத் தானும் அனுபவிக்க வேண்டுமென்று தன் உயிரைப் போக்குவதற்காகத் தேரிலிருந்து கீழே விழுகிறான்.

"ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக ஆன்மாவின்
உள்ளிருக்கின்ற கடவுள்
விளக்கமாகிய அருள் வெளிப்படும்" (திருவருட்பா - உரைநடைப்பகுதி. ப. 184)

என்ற வள்ளலாரின் உயிரிரக்கக் கோட்பாட்டின்படி கடவுள் அருள் வெளிப்பட்டது. அந்தக் கணத்திலே இறந்து கிடந்த பசுங்கன்றும், அமைச்சர் கலாவல்லபனும், அரசகுமாரன் வீதிவிடங்கனும் உயிர்பெற்று எழுந்தனர். இவ் வகையில் மனுச்சோழனின் உயிரிரக்கம் செத்தவர்களை எழுப்பிற்று என அறியப்பெறலாம்.

உயிரிரக்கம் எனும் தவத்தின் ஆற்றலைப் பெற்றவர்க்கு இயமனை வெல்லுதலும் கைகூடும் எனத் திருவள்ளுவர் கூறும் பின்வரும் கூற்றும் இவண் நோக்கத்தக்கது.

*"கூற்றும் குதித்தலும் கைகூடும் நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"* (குறள் - 269)

## உயிரிரக்கமே வள்ளலார் - மனுச்சோழன்

உயிரிரக்கமே வள்ளலாரின் உயிராகும். உயிரிரக்கம் தன்னிடத்திலிருந்து நீங்கில் தானும் உயிர் நீத்திடும் கொள்கையை உடையவர் வள்ளலார் என்பதைப் பின்வரும் பாடலால் அறியப் பெறலாம்.

"..........................................................

*உருவஎன் உயிர்தான் உயிர் இரக் கந்தான்*
*ஒன்றதே இரண்டிலை இரக்கம்*
*ஒருவில்என் உயிரும் ஒருவும்என் உள்ளத்*
*தொருவனே நின்பதத் தாணை"* (திருவருட்பா - 3506)

உயிரிரக்கமே உயிராய்க் கொண்டவன் மனுச்சோழன். பசுங்கன்று உயிர்பெற்றெழத் தன்னையே இழக்கத் துணிந்தவன் என்பதைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

"இனி, இப்பசுங்கன்று உயிர் பெற்றறெழுந் திருப்பதற்கு உபாயம் என் புத்திரனுயிரையன்றி யென்னுயிரையும், என் மனையாளுயிரையும், என்னரசாட்சியையும் எனக்கு உரித்தாகிய எல்லாப் பொருள்களையும் கொடுத்துவிட்டால் நேரிடுமென்று சொல்வாருண்டானால், இதோ கொடுக்கிறேன். அவ்வாறு சொல்வோரு மில்லையே! இதற்கு நேரிட்ட துக்கமும் எனக்கிதனாலுண்டாகிய துயரமும் எப்படித் தீருமோ! இப்படி யென்றறியேனே! என்ன செய்வேன்!"

(திருவருட்பா - உரைநடைப்பகுதி. ப. 113)

இவ் வகையில் தம்முடைய உயிரிரக்கச் சிந்தனைகளை வெளிப்படுத்துபவனாக மனுச்சோழனை மனு முறைகண்ட வாசகத்தில் வள்ளலார் படைத்திருப்பதை ஒப்பு நோக்கி அறியப் பெறலாம்.

## செத்தாரை எழுப்புதல்

உயிரிரக்கமே வடிவமாய்க் கொண்ட வள்ளலாரிடம் திருவருள் வெளிப்பட்டு அருளுருவமாகவே அவரை மாற்றிவிட்டது எனலாம். செத்தாரை எழுப்புதல், மரணமிலாப் பெருவாழ்வு போன்ற கோட்பாடுகள் அவரிடம் பிற்காலத்தில் எழுதுவதற்கு மனுச்சோழனின் வரலாறு தூண்டுகோலாக இருந்திருக்கின்றது எனக் கூறலாம். இதனை,

"இறந்தவர் எழுகஎன் றெண்ணியியாங் கெழுப்பிட
அறந்துணை என்கருள் அருட்பெருஞ் ஜோதி
செத்தவர் எழுகெனச் செப்பியாங் கெழுப்பிட
அத்திறல் என்கருள் அருட்பெருஞ் ஜோதி "
(திருவருட்பா - அகவல்: 869 - 72)

"என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே "
(திருவருட்பா - 5601)

"மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர் "
(திருவருட்பா - 5576)

ஆகிய பாடல்வரிகள் புலப்படுத்துகின்றன.

இந்த வகையில், உயிரிரக்கக் கோட்பாட்டை வகுத்து, அதன் மூலம் மரணமிலாப் பெருவாழ்வை மானுடம் பெற, சங்கம், சாலை, சபை எனும் நிறுவனங்கள் மூலம் வழிகாட்டிய வள்ளலார், இவற்றை விளக்குவதற்கு மனு முறைகண்ட வாசகத்தில் மனுச்சோழனைப் புதிய கோணத்தில் படைத்துள்ளதை நன்கு அறியலாம்.

---

## தமிழ்த்தாய் விருது பெற்ற மதுரைத் தமிழ்ச்சங்கம்

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

நந்தன, சித் திரைமுதல் நாள், நற்றமிழ்க்கோர் பொன்னாள்!
நந்தமிழ்ச்சங் கம்தமிழ்த்தாய் விருதுபெற்ற நன்னாள்!
செந்தமிழின் வளர்ச்சிக்கோர் படிக்கல் நேர் இந்நாள்!
சீர் மதுரைத் தமிழ்ச்சங்கம் அமைத்துவந்தார் முன்னாள்
செந்தமிழ்இ தழ்தொடங்கித் தமிழ்வளர்த்தார் பன்னாள்
சேதுபுகழ் பொன். பாண்டித் துரைத்தேவர்! கண்ணோர்
பந்தமுடன் சங்கத்தார் தமிழ்வளர்ப்ப திந்நாள்!
"பரிந்தன்னை நேரரசு விருதளித்த நன்னாள்!"

உவப்பாழி நேர்மிகவே வாழ்த்துகின்றார் சான்றோர்!
உலகமெல்லாம் வாழ்தமிழர் பேருவகை கொண்டார்!
தவத்தின்நேர் தமிழ்போற்றும் தொண்டுமனம் கொண்டார்
தமிழ்ப்பயிரை வளர்த்தளிக்கத் தமிழரெல்லாம் கொண்டார்!
நவமணிசேர் உயர்மதிப்பை விருதுவழி கண்டார்!
நானிலத்தும் வாழ்தமிழர் மனநிறைவே என்றார்!
உவர்கடல் நல் நீர்சேர்ந்த கார்மேகம் கண்டோர்!
உடன் மழைபெய் நிலை "நன்றி" எண்ணல்போல் நின்றார்!

மழைபொழிந்தால், பயிர்செழிக்கும் உயிர்தழைக்கும் நிலைபோல்
மாமதுரைத் தமிழ்ச்சங்கத் தொண்டென்றும் தொடர்க!
குழைமனத்து மீனாட்சி சொக்கர்காத் ததமிழை
குறைவின்றி நாமணக்கத் தாள்மணக்கச் செய்வீர்!
இழையோடும் பொன் நூலில் மணிவகைகள் ஆர்ந்தே
இன்ஆரம் ஆவதுபோல் ஆக்குகநற் றமிழே!
தழைத்தோடும் கிளைதாழக் கனிகொழுத்த மரம் நேர்
தனித்தமிழ்க்கல் லூரியும்தொண் டாலுயர்ந்தே வெல்க!

ஒளிவிளக்கே என்றாலும் நெய்,திரி, கோல் வேண்டும்!
ஒண்டமிழை வளர்ப்பதற்கும் நல்குறிக்கோள் தூண்டும்!
களிகொண்டல் மலைத்தலைவன் பெண், அணையைத் தாண்டும்!
கடி தோடும் வைகையால் செழித்திருக்கும் யாண்டும்!
வளிதென்றல் மல்லிகையின் மணம்சேர்க்கும் மதுரை
வாழ்தமிழ்ச்சங் கத்தார்சீர் செழுந்தமிழைப் போற்ற,
நளிகங்கை சென்னிமிசை வைத்துள்ள இறையே,
நான்காம் தமிழ்ச்சங்கத் தார்க்குயாவும் அருளே!

# பேரறிஞர் அண்ணாவின் சுவையாடலில் வெளிப்படும் வாழ்வியல் விழுமியங்கள்

க. அன்பழகன்
அண்ணாமலை நகர்

## முன்னுரை

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு சகாப்தம். திராவிட வரலாற்றின் எழுச்சிமிகு பக்கம் அண்ணா. பன் முனைப்புக்களிலும் தமிழ், தமிழ்நாடு, தமிழர் என்று எண்ணம் உறுதிபடத் தொண்டாற்றியவர். அவரின் ஆளுமை பல வெளிச்சப் பக்கங்களைக் கொண்டது. தன்னுடைய செம்மாந்த அறிவால் இந்திய இலக்கியங்கள் மட்டுமின்றி உலக இலக்கியங்களையும் தீராத தாகமுடன் தேடித்தேடி ஆழக்கற்று அதனைத் தன்னுடைய படைப்புத் திறனால் வெகு எளிமையாகவும் கேட்போரை மயங்க வைத்து சிந்தை ஈர்க்கும் வண்ணம் பேச்சாற்றல், எழுத்தாற்றல் எனும் இரு தளங்களில் அறிவாட்சி புரிந்தவர் அண்ணா. மறுமலர்ச்சி எனும் சொல்லுக்கு மேன்மை தந்தவர். அவரது மொழிச் சிந்தனை, மக்கள் சிந்தனை, உயர்பண்புகள், அவரின் பன்முகச் சுவையாடல்கள் பெரும் தாக்கத்தையும் வீரியமிகு மாற்றங்களையும் உண்டாக்கியவை. அதன் வாயிலாகப் புலப்பட்டுத் தெளிந்த விழுமியங்கள் என்னும் வாழ்வின் பயனாகும். அவை குறித்து இக்கட்டுரை அடையாளப்படுத்துகிறது.

## விழுமியம் எனும் சொல்

விழுமியம் எனும் சொல் மதிப்பீடு (value) எனும் எளிய பொருள் கொண்டது. இந்த மதிப்பீடுகள் என்பது ஒரு மனிதனின் உயர் வாழ்வியல் பண்பை வடிவமைப்பது என்று கூறலாம். பண்பாடு எனும் சொல்லின் வேராக இந்த விழுமிய்ம் அமைந்துள்ளது. தமிழ் மரபும் பண்பாடும் விழுமியங்களால் கட்டமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அகம், புறம் என இரு தளங்களிலும்

எல்லாச் சூழல்களிலும் பொருத்திப்பார்த்துக் கொள்ள இடமளிக்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர், மெய்ப்பொருள் காண்பது அறிவு, அறம் செய விரும்பு, ரௌத்திரம் பழகு, தையலை உயர்வு செய், அன்பே சிவம் இப்படி எல்லாவற்றையும் ஆய்வு செய்து விழுமியத்துள் அடக்கலாம். ஒரு மனிதன் தன்னுடைய இருப்பின் அடையாளத்தைத் தொலைந்து விடாமல், மனிதனாக வாழ்ந்து மனிதனாக மறைந்து இறந்தும் வாழும் பேற்றினை விழுமியமே உறுதி செய்கிறது. ஒழுக்கம் (திணை என்கிறது இலக்கியம்) விழுமியத்தின் உயர் கூறுகளில் (Noble elements) ஒன்றாகக் கருதப்படுகிறது. பேறிஞர் அண்ணா எல்லாவற்றையும் அறிவின் (பகுத்தறிவின்) பரப்பில் உள்வாங்கிக் கொண்டவர். அவற்றை முழுக்க அவரது எழுத்துக்களும் சொற்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும், எள்ளலாகவும், சுவையாகவும், எளிமையாகவும், அழுத்தமுறவும், ஊசி தைத்தலாகவும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. இவற்றைச் சில சான்றுகள் வழி கண்டு சுவைக்கலாம் என்பதையே இக்கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

**அண்ணாவின் சுவையாடல்**

எல்லாவற்றையும் படித்தார். எல்லாவற்றையும் படைத்தார். இலக்கியப் படைப்பில் எதையும் விட்டு வைக்கவில்லை. அவரது எழுத்தின் வன்மை குதிரைப் பாய்ச்சலாகவும், முயல் துள்ளலாகவும், பறவை சிறகசைப்பாகவும், புயற் காற்றாகவும், முகம் வருடும் தென்றலாகவும், அழகு காட்டும் பூக்களின் மணமாகவும், எனப் பன்முக வடிவங்களில் மிளிர்ந்து காட்சிப்படுத்தியது. எழுதுவதும் படிப்பதும் எளிதல்ல. எதை எழுதுவது? எப்படிப் பொருத்த முற எழுதுவது, படிப்போர் மனச் சிந்தையுள் எப்படிச் செலுத்துவது என்பதையெல்லாம் அண்ணா எழுத்து உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியது. இது எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை. வாய்க்கிற எவரும் வளமாய்க் கையாண்டதும் இல்லை. அண்ணாவிற்கு அது எளிதாய் வந்தது ஒரு நிறைந்த நதியின் அழகைப்போல.

அண்ணாவின் சுவையாடல் கருத்துகளில் யாரும் கற்றுக் கொள்ள எந்த வயதும் கற்றுக் கொள்ள ஏராளமாய் இருக்கிறது. வாழ்வின் மேன்மை அண்ணாவின் எழுத்து வழி காட்டி. இருளில் கிடைத்த நம்பிக்கைச் சுடர்.

குடும்பக் கல்விதான். தேசியக் கல்விக்கு வேர் என்பார் மகாகவி பாரதியார். குடும்பம் சரியாக அமைந்து விட்டால் தேசம் சரியாக அமைந்துவிடும் என்பது தான் அண்ணாவின் கருத்து. வீடு எப்படியோ நாடும் அப்படித்தான் என்றார். போலித் துறவறம் பேணுவதினும் சிறந்த இல்லறம் போதும் என்பது அண்ணாவின் அசைக்க முடியாத நம்பிக்கை. குடும்பக் கட்டுப்பாட்டின் மதிப்பை உணர்த்துகிறார். ஒன்றையே இலக்காக வைத்து அதனையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குதல் நன்று. எப்போதும் இடர் இல்லை என்கிறார்.

*"குறிக்கோள் தனைக் கெடுக்கும் குறை அறிவு...*
*..... தமக் கென்று மாமேதாவித் தன்மை*
*மெத்த இருக்குதென்ற பித்தத்தீ நாலுங்காண்"*

இதுதான் மனிதனுக்குச் சிக்கல். இலக்கற்ற வாழ்வு இடர்களையும், இழப்புகளையும் சந்திக்கும் என்பது தான் அண்ணா உணர்த்துவது.

மனிதனை மதிக்க வேண்டும். மனித நேயம் போற்றப்படவேண்டும் என்கிறார் கடவுள் நம்பிக்கை என்பது ஒருபுறம். இதனால் நிகழும் மனிதனுக்கு எதிரான தீமைகளை ஒழிப்பது மனிதனின் கடமை என்பதையும் அண்ணா தெளிவுபடுத்துகிறார்.

*சீலமோ சிவ நெறியோ*
*சிற்றின்பக் கூடமோ....*
*...... .... .... ....*
*கொல்லு புலிக்காடு நீங்கி*
*வந்துற்றேன் கல்விபயில் கூடம் நோக்கி"*

மேற்சுட்டிய வரிகள் இன்றைக்குப் பொருத்த முற அமைவது மட்டுமல்ல அது மனித மதிப்பைச் சீரழிப்பதும் ஆகும். சிந்தை கெடாது செம்மாந்து வாழ்வதும் விழுமியம் தான்.

கடமை என்பதில் தகுதி, வெறுப்பு, திறமை, நாணயம், உண்மைத் தொண்டு. இப்பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். மனிதன் மதிப்பு

அடைவது இத்தன்மையால்தான். அன்பே எல்லாவற்றையும் மதிப்பு மாறாமல் வைத்திருக்கும். இது வாழ்வின் நிரந்தர அடையாளம் என்கிறார்.

"மதிப்பு ஒரு காலத்தில் மறையலாம்; மரியாதை ஒரு நாளில் குறையலாம்; ஆனால் அன்பு மட்டும் என்றும் நிரந்தரமானது"

இந்த நிரந்தரம் மதிப்புமிக்கது.

"நமக்கு இமையில் ஏற்படும் சபலங்களை
விரட்டிடும் துணிவு மட்டும் வந்துவிட்டால்
நாம் நிச்சயம் வெற்றி அடைபோம்"

என்றும் துணிவின் மதிப்பை எடுத்துக் காட்டுகிறார். மனிதன் குறிப்பாகத் தமிழன் எப்படி மதிப்புடன் வாழவேண்டும் என்பதை வேகமான சொற்களில் வெளிப்படுத்துகிறார்.

"உயர்த்துங்கள் உழைப்பாளியை, மடமையை
மடியச் செய்யுங்கள், மானமாய் வாழுங்கள்,
அறிவே துணை, அன்பே குணம் எனக்
கொள்ளுங்கள்...."

இவையும் மனிதனை நெறிப்படுத்தும் மதிப்பீடுகளே உடையாத உள்ளம் எனும் கட்டுரையில் உள்ளத்தின் மதிப்பைப் புலப்படுத்துகிறார். உள்ளம் உடைந்து போகும் காரணங்களைப் பட்டியல் இட்டாலும் உடையாது இருக்க வேண்டிய அவசியத்தை மதிப்பிட்டு உரைக்கிறார்.

"நம்பி மோசம் போகிறோம் என்ற எண்ணம் வருகிறபோது, நாம் உழைத்தது வீணுக்கு என்று தோன்றுகிறபோது ..... நாம் கையாண்ட முறை தவறோ என்ற எண்ணம் ஏற்படுகிறபோது நமது முயற்சிகள் முறிகின்றன என்ற அச்சம் வரும்போது நமது திறமை பயனற்றதாக்கப்படுகிறது" இப்படிக் குறிப்பிடுவது விளைவுகளை ஏற்படுத்தும் என்றாலும் உள்ளம் உடையாதிருக்க விளைவுகளைப் பதிசோதிப்பதும் மதிப்பிடுவது தான். பகுத்தறிவு என்பது ஒரு மனிதனின் வாழ்வில் என்றும் நிறைந்து இருக்கவேண்டிய விழுமியமாகும். இது சரியாக இருந்தால் மனிதவாழ்வின் எல்லாப் பக்கங்களும் செம்மையாக அமையும்.

*"பாடத்திட்டத்தில் பகுத்தறிவைப்*
*புகுத்தினால்தான் மக்களுக்குப் பழைமை*
*மிணிடத்திலுள்ள பாசம் குறையும். மனத்திலுள்ள*
*மாசு நீங்கும். காலத்திற்குத் தக்கது போலக்*
*கருத்து வளரும்.."*

என்கிற வரிகள் கவனமுடன் கருத்தில் கொள்ள வேண்டிய மதிப்பீடுகள் ஆகும். பகுத்தறிவு இன்மை பல சீர் கேடுகளுக்குக் காரணமாக அமைகிறது. அண்ணாவின் மதிப்பீடுகள் அவரது படைப்புக்களில் கருத்து வடிவங்களில் புதைந்து கிடக்கின்றன. அவற்றைத் தேடிச் சுவை கொள்ளல் நமது கடமையாகும். அவரின் எழுத்துக்கள் பற்றிக் குறிப்பிடும் போது,

*"ஒவ்வொரு வரையும் மனிதனாக்குபவை*
*ஒவ்வொரு வரையும் தமிழனாக்குபவை*
*ஒவ்வொரு வரையும் அறிஞனாக்குபவை*
*.... ....... ....... ...*
*நிலையை உயர்த்தும் நினைப்பைத் தருபவை"*

என்பது எத்தகைய வாய்மையான உறுதிமொழி.

*"மனிதா*
*நீ யாருக்கும் தலை வணங்காதே*
*நிமிர்ந்து நட,*
*கைவீசிச் செல்*
*உலகைக் காதலி*
*செல்வரை, செருக்குள்ளவரை*
*மத வெறியரைத் தள்ளி எறி*
*மனசாட்சியே உன் தெய்வம்.*
*உழைப்பை மதி, ஊருக்குதவு*
*உனக்கு எட்டாத கடவுளைப் பற்றிப் பிதற்றாதே*
*சிந்தனை செய்! செயலாற்று*

என்கிற வரிகள் விழுமியங்கள் எவற்றைக் கைக்கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துபவை.

பின்வரும் கவிதையில் மனிதனுக்குத் தேவையான விடுதலையைப் பாடுகிறார் இது விழுமியப் பொருளை விதந்துப் பேசும் வரிகளாகும்

*"தொல்லைகள் தீரவேண்டின்*
*சுதந்திரம் வேண்டும்; மக்கள்*
*எல்லோரும் ஒன்றே என்னும்*
*எண்ணமிங் கோங்க வேண்டும்*
..... .... .... .... .....
..... .... .... ... .....
*கல்வியில் பெருக்கம் வேண்டும்*
*கலைகளில் புதுமை வேண்டும்*
*சொல்லிலே உண்மை வேண்டும்*
*சோர்விலா உள்ளம் வேண்டும்*
..... .... ..... ...
*சாதிகள் கோடி பேசும்*
*சண்டையால் ஓய்ந்து போவார்*
..... .... .... ...
*நீதியைத் தூயதாக*
*நிலைவிடும் காதல் தன்னை*
..... .... ... ...
*பஞ்சமும் பிணியும் தீர்ந்து*
*பண்புடன் வாழும் மார்க்கம்*

## முடிவுரை

நீண்டு கொண்டே போகும் பேரறிஞர் அண்ணாவின் சுவையாடல்கள். மனிதவாழ்வின் ஒழுக்கம், அச்சம்இன்மை, உழைப்பு, புதுமை, நேர்மை, அறிவு, பகுத்தறிவு, மனச்சோர்வு இன்மை, ஊக்கம், மனத்தூய்மை, மனசாட்சிக்கு ஒப்பச் செயல்படல், சிந்தை கெடாமை, மூடநம்பிக்கை ஒழிப்பு எனும் வாழ்வின் பல விழுமியங்களைக் காட்சிப்படுத்துகிறது. இவற்றைச் சில சான்றுகள் வழி அடையாளப்படுத்தி நிறைகிறது இக்கட்டுரை.

# திருப்புகழின்பம் (நான்கு வினாடிகள்)

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

திருப்புகழ் மிகச் சிறந்த நூலென்பது யாவருமறிந்ததொன்று. சந்தப் பாட்டாதலின் அதன் இன்பம் சொல்லில் அடங்காது. " கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ? பொல்லாக் கருப்புகழைக் கேட்குமோ? கானமயில் வீரன் திருப்புகழைக் கேட்குஞ்செவி" என்று அதன் சிறப்புப்பாயிரம் கூறுகிறது. இந்நூலை அருளிச் செய்த அருணகிரி நாதரைப் புகழ்ந்து தாயுமானவர் "ஐயா அருணகிரி அப்பா உனைப்போல மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்? என்னும் பாடலைப் பாடியுள்ளார். திருப்புகழில் ஒரு பாடலின் முதல் நான்கடியை ஈண்டு காணலாம்.

தீயும் பவனமும் நீருந் தரணியும்
வானுஞ் செறிதரு பசுபாசத்
தேகந் தனிநிலை யேயென் றிருவினை
தீருந் திறல்வினை அறியாதே
ஓயும் படியறு நூறும் பதினுறழ்
நூறும் பதினிரு பதுநூறும்
ஓடுஞ் சிறுவுயிர் மீளும் படிநல
யோகம் புரிவது கிடையாதோ?

நிலம், நீர், தீ, காற்று, வான் எனும் பஞ்ச பூதங்களும் நம் உடலில் உள்ளன என்பதை அருணகிரியார் தீயும் பவனமும் நீருந் தரணியும் வானுஞ் செறிதரு தேகம் என்று முதலடியில் கூறியுள்ளார். இருவினை தீரும் நல்வினை அறியாமல் வாழுகின்றேன் என்று அவர் **இரண்டாமடியில்** வருந்திக் கூறுகின்றார்.

அவர் பஞ்ச பூதங்களுள் ஒன்றான காற்றைப் பற்றி அருமையான பயனுள்ள கருத்தைக் கூறியுள்ளார். நாம் ஒருமுறை காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுவதற்கு நான்கு வினாடிகள் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

அறுநூறு (பொருள் வெளிப்படை)....................................................................600

பதினுற்ழ்நூறு - பதின் + உறழ் + நூறு - 10 × 100 = ..................................1000

பதினிருபது நூறு - பதின் + இருபது + நூறு - 10 × 20 × 100 = ...........20000

21600

நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்தறுநூறு முறை மூச்சு விடவேண்டும் என்பதை அவரின் **மூன்றாம் அடியின்** மூலம் அறியலாம்.

நாளொன்றுக்கு (24 × 60 × 60 = 86400) எண்பத்தாறாயிரத்து நானூறு வினாடிகள் உள்ளன. எனவே ஒரு முறை மூச்சுவிட (86400/21600 =4) நான்கு வினாடிகள் நேரம் செலவாகிறது.

இந்த 21600 சுவாசங்களையும் அடக்கின் இறப்பொழியும் (மீளும்படி - இறப்பினின்று மீட்சி அடையுமாறு ). இவ்வாறு அடக்குதற்கு உரிய வழி தியானம் (யோகம்) புரிதலே ஆகும். தியானத்தைச் செய்வது அடியேனுக்குக் கிடைக்கமாட்டாதே? என்று முருகப்பெருமானிடம் அருணகிரியார் நான்காமடியில் ஒரு வினாவை எழுப்புகின்றார்.

அருணகிரியாரின் கணக்கின்படி பஞ்ச பூதங்களுள் ஒன்றான காற்றை நாசியின் மூலம் ஒரு முறை இழுத்து விடுவதற்கு நான்கு வினாடிகள் நேரம் எடுத்துக் கொள்பவர்க்கு நீண்ட ஆயுளும் நோயற்ற வாழ்வும் கூடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தியானம் செய்யும் போது காற்றை இழுத்து நிறுத்திப் பின் விட வேண்டும் என்ற கருத்து இன்றும் நிலவுகிறது. அருணகிரியாரின் கருத்து இன்றும் நிலைத்திருப்பதை எண்ணியெண்ணி இன்பமடையலாம்.

# வாழ்வோர் யார்?

கவிவேந்தர் கா.வேழவேந்தன்

'எழுந்தாலும் 'நெற்கதிர்' போல் எழுதல் வேண்டும்;
எரிந்தாலும் 'விளக்' கினைப்போல் எரிதல் வேண்டும்;
அழுதாலும் 'தேனடை' போல் அழுதல் வேண்டும்;
அசைந்தாலும் 'தென்ற' லைப்போல் அசைதல் வேண்டும்;
விழுந்தாலும்'விதை" யைப்போல் விழுதல் வேண்டும்;
விரைந்தாலும் 'கார்முகில்' போல் விரைதல் வேண்டும்;
பழுதில்லா வாழ்பவரே 'வாழ்வோர்' என்பேன்!
பலர்க்குதவி வாழ்பவரே 'வாழ்வோர்' என்பேன்!

எத்தனையோ மன்னரிங்கே இருந்தார்; போனார்;
எழில் 'பாரி' மட்டும் ஏன் நெஞ்சில் நின்றான்?
கத்தரிக்காய்த் தலையிலுள்ள காம்புக் கிரீடம்
கறிக்குழம்பில் வந்திடுமா? அதுபோல் சேர்க்கும்
சொத்திங்கே உயிர்போனால் தொடர்ந்தா ஏகும்?
தொடர்ந்திங்கே சொன்னாலும் செல்வம் தன்னை
வைத்திருப்போர் உணர்வாரோ? நல்ல சொற்கள்
வைக்கின்ற 'நடுகல்' தான் மிஞ்சும் சொத்து!

எவ்வளவோ அரசாங்கம் திட்ட மிட்டும்
இன்னுமிங்கே வறுமைப்பேய் ஒழிந்த துண்டா?
எவ்வளவோ அரசாங்கம் உதவினாலும்
இரந்துண்போர் காட்சியின்னும் ஓய்ந்த துண்டா?
எவ்வளவோ சொன்னாலும் எழுதி னாலும்
இந்நாட்டில் சமத்துவமும் மலர்ந்த துண்டா?
எவ்வளவோ அவ்வளவு மட்டும் வைத்தே
இருப்பதனை அறப்பணிக்குத் தந்தால் என்ன?

கோடிகளை இருப்பறையில் ஒளித்து வைத்த,
கொழுத்தவரைப் பழுத்தவரை நினைத்தோ மோநாம்?
ஆடுகின்ற ஆட்டமெலாம் ஆடிச் செல்லும்
ஆர்ப்பாட்டச் 'சூறை' யினால் ஏது நன்மை?
தேடுகின்ற செல்வத்தைத் தேகந் தன்னைச்
சீர்மணக்கும் சந்தனம்போல் தேய்த்தோர் மட்டும்
ஏடுகளில், எழில்நெஞ்சில் நிலைத்து நின்றார்;
இறந்துமிங்கே வாழ்வோரே 'வாழ்வோர்' என்பேன்.

# பட்டதும் போதும்; கெட்டதும் போதும்

புலவர். சா. பன்னீர் செல்வம்

அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியில், பேச்சு மொழியும், எழுத்து மொழியும் வேறுபட்ட வகையிருக்கும் நிலைமாற்றி, பேச்சு மொழியையே எழுத்து மொழியாக்கி இல்க்கிய மொழியாக்கி இலக்கண நெறிப்படுத்தி விடலாம் என்னு மொருகருத்து அவ்வப்போது சிலரால் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த இருபத்தொன்றாம் நூற்றண்டிலும் எழுத்து வடிவின்றிப் பேச்சு நிலையிலுள்ள மொழிகளும் உலகிலுண்டு. பேச்சும் எழுத்துமாகிப் பின் மூச்சடங்கிய மொழிகளும் பலவாம். பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல கோடி மக்களின் பேச்சு மொழியாயும், எழுத்து மொழியாயும், இலக்கிய மொழியாயும் நின்று நிலவுகின்ற மொழிகளுள் தமிழே தலையானதெனலாம்.

## வழக்கும் செய்யுளும்

பேச்சுமாகி எழுத்துமாகி, தமிழரின் மூச்சுமாகத் திகழும் தமிழின் பல்வேறு சிறப்பியல்களுள் பேச்சு நடையும். எழுத்து நடையும் வேறுபட்டமைதலும் ஒன்றாகும். தமிழில் பேச்சும் எழுத்தும் வேறுபடும் தகையன எனவே பொதுவான கருத்தாகிறது. ஆனால் தமிழின் வழிமரபை நுழைபுலத்துடன் நுணுகியாராயின், தமிழின் மொழி நடை மூவகைப்பட்ட தென்பது தெளிவாகப்படும்.

தொல்காப்பியம் பெருநூலுக்கு ஒல்காப் புகழுடையதாய்ப் பாயிரம் வரைந்த பனம்பாரனார்.

*"வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்*
*எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி"*

தொல்காப்பியர் நூலியற்றியதாகக் கூறுகிறார். தமிழில் வழக்கும் செய்யுளும் வேறு வேறு இயல்பின என்பது இதன் வழி. வேறு படும் கருத்திற்கு இடனின்றித்திடமாகின்றது. ஆயின், வழக்காவது யாது?

வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர்கட்டாக லான - தொல். என்கிறார் தொல்காப்பியர். மொழி நிகழ் வென்பது கற்று வல்ல சான்றோரின் மொழியியல்பைப் பொருந்தி வளர்வதாகலின் அவர்தம் மொழி நடையே வழக்கு நடையாகக் கொள்ளத்தகுவ தென்பது இதன் பொருளாகும். இதன் முடிபொருளாவது வழக்காவது பேச்சுவழக்கன்று எனத் தெளிக. அற்றன்று, கற்று வல்லோரின் பேச்சு நடையினையே ஆசிரியர் தொல்காப்பியர் வழக்கெனக் கொண்டார் எனவும் வாத மெழலாம். செய்யுள் நடையல்லாத வழக்கு நடையாவது, தமிழ் கூறும் நல்லுலகத்து மக்களின் அன்றாடம் பேச்சு நடையே எனல் ஆசிரியர் கருத்தாயின்.

வழக்கெனப்படுவது வாய்மொழி யதுவே - என்றமையாது, உயர்ந்தோர் மேற்றே - என வேறு பிரிந்து ஓதுவானேன்? கற்றுவல்ல சான்றோரின் பேச்சு நடை ஏனையோர் பேச்சு நடையினும் திருத்தமுறு நடையென்பது கொண்டன்றோ ஆசிரியர், உயர்ந்தோர் எனவேறு பிரித்தோதினார்? இதன்வழி, திருத்தமற்ற பேச்சு நடை மொழியின் வழக்குநடையாகாது; திருத்தமுறப் பேச்சும் எழுத்துமாகும் நடையே வழக்கெனப்படு மெனல் தெளிவுறுதல் காண்க. திருத்தமான பேச்சு நடையும், செய்யுளல்லாதல் எழுத்து மொழியும் ஒன்றாதல் இன்றும் நடைமுறையாதல் என்னுக. இத்தகுசெயல் முறை இக்காலத்திய புது முறையன்று; தொன்னெடுங் காலத்துப் பழ மரபென்பதும் உறுதியாகின்றது.

## இரண்டல்ல மூன்று

எல்லார்க்குமுரிய பேச்சு மொழியைத் தொல்காப்பியர் வழக்கு மொழியாகக் கொள்ளவில்லை என்பதற்கு, உயர்ந்தோர் எனவேறு பிரித் தோதியமை உறுதியான சான்றாகிறது. உயர்ந்தோரின் திருத்தமான பேச்சும், எழுத்துமாகும் மொழி நடை வேறு; செய்யுள் நடை வேறு என்பதற்கு, "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்" - எனப் பனம்பாரனார் கூறுதலும், ஆசிரியர் பல விடங்களில் வழக்குமரபையும், செய்யுள் மரபையும் வேறு பிரித்துக் கூறுதலும், செய்யுளுக் கெனத் தனியோர் இயல் வகுத்துக் கூறுதலும் சான்றாகின்றன. இதன் வழி தமிழின் மொழி நடை மூவகையாகின்றன.

1. திருத்த மற்ற பேச்சு மொழி
2. திருத்த முறு பேச்சும், எழுத்துமாகும் மொழி
3. யாப்புவழிப்படும் செய்யுள் மொழி

தொல்காப்பியர்க்கு முன்னிருந்தே, பேச்சுமொழியும் செய்யுள் மொழியுமல்லாத எழுத்து மொழியொன்றுண்டு எனத் தெளியத் தொல்காப்பியத்திலேயே சான்றுகள் மேலும் பலவுண்டு.

## யாப்பாவது யாது?

மாத்திரை, எழுத்து, அசை தொடங்கி, அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன முடியச் செய்யுள் உறுப்புக்கள் முப்பத்து நான்கு எனக் கூறிச்செய்யுளியலைத் தொடங்கும் ஆசிரியர், எழுத்து, அசை எனச் சொல்லப்பட்ட முறையில் கருதிய செய்தியை வகைப்படுத்தியுரைத்தலே யாப்பாகும் என்கிறார். அத்தகுயாப்பு வழிப்படும் படைப்புக்கள் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முது சொல் என ஏழுவகைப்படும் எனவும் கூறுகின்றார்.

## நூலாவது யாது?

இவ்வேழனுள் பாட்டு, உரை, நூல் என்பனவற்றை வேறு பிரித்துக் கூறுதலும், அவற்றைப்பற்றி ஆசிரியர் தரும் விளக்கங்களும் ஈண்டைய ஆய்வுக்கு உரியனலாம். பாட்டாவது யாதென ஆசிரியர் விதந்தோதினாரில்லை. நூல், மரபு என்பன குறித்துச் செய்யுளியல், மரபியல் இரண்டிடத்தும் விரித்துரைக்கின்றார். நூலின் உறுப்புக்களாகச் சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம் என்பவற்றைக் கூறுதலானும், சூத்திரம் பற்றிச்செய்யுளியல், மரபியல் இரண்டிடங்களிலும் கூறும் விளக்கங்களாலும் இலக்கண மரபுகளை இனிதுரைக்கும் அதனையே ஆசிரியர் நூலெனக் கொள்ளுதல் புலனாகும்.

## உரையாவது யாது?

பாட்டின் இடையிடையே குறிப்புரையாகவும், பாட்டின்றி முற்றும் உரைநடையாகவும் இயற்றப்படும் இலக்கியங்கள் பொருளொடு புணராப்

பொய் மொழியாயும், பொருளொடு புணர்ந்த நகை மொழியாயும் அமையுமாதலின் உரை எனப்படும் இலக்கிய வகை நான்காகும் என்கிறார். இவற்றுள் பாட்டினிடை உரை அமைதலை தொன்மை என்னும் செய்யுள் உறுப்பாகவும் சுட்டுகிறார். இந்நான்கும் தனி நூலாக அமைவன. அவ்வாறின்றிப் பிரிதொரு நூலின் உறுப்பாகவும்,உரையமையும் என்பதை மரபியலுள் கூறுகிறார். மரபியலிற் சுட்டும் உரையாவது. இலக்கண நூலின் பொருளை எல்லார்க்கும் விளங்க விரித்துரைக்கும் இளம் பூரணர் உரை, நச்சினார்க்கினியர் உரை என்றாற் போல்வன. பிற்காலத்து, அடியார்க்கு நல்லார் உரை, பரிமேலழகர் உரை என்றாற் போலும் இலக்கிய உரைகளும் இதனில் அடங்குனவாயின.

**பாட்டாவது யாது?**

இதனிடை, பாட்டு, செய்யுள், உரை என்பன தம்முள் வேறுபடும் தலைகமை பற்றி இளம் பூரணர் உரைக்கும் விளக்க மொன்று உண்டு.

"பல சொல் தொடர்ந்து பொருள் காட்டுவனவற்றுள் ஓசை தழீஇயவற்றைப் பாட்டென்றார். ஓசையின்றிச் செய்யுள் தன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது. " என்பது அவர் தரும் விளக்கம். இலக்கண நூலாகும் செய்யுளும், பாட்டும் வேறுபாடுடையனவாதல் வேண்டிய இளம்பூரணர் பாட்டுக்கும் செய்யுளுக்கும் இசை யெழுங்காகும் ஓசையை ஒலி நயத்தை வேறுபாடாகக் கொண்டுரைத்தார்.

"பா என்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லும் தெரியாமற்பாட மோதுங்கால், அவன் செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற் கேதுவாகிப் பரந்து பட்டுச் செல்வ தோர் ஓசை" - என்ற பேராசியர் விளக்கமும் இணைத்தெண்ணத்தக்கது. ஆயின்,செய்யுளும், உரையும் வேறுபடும் பான்மையை இயம்பினாரிவர்.

ஆசிரியர் தொல்காப்பியர், சூத்திரம், உரை என்பன பற்றிக் கூறும் விளக்கங்களை விளங்கக் காண்போமாயின் செய்யுளாவது சொற் சுருக்கமாயமைவது எனவும், உரையாவது அளவொடு விரியுஞ் சொற் பெருக்கமாவது எனவும் கொளல்தகும். பாட்டு முதலாக முது சொல் முடிய

ஏழனுள் பாட்டுதவிர்த்து ஏனைய ஆறும் அடிவரையறையில்லாதன எனக் கூறுதலின், பாட்டாவது செய்யுள், உரை என்பவற்றுடன் அடியளவு என்னுமளவில் வேறுபடுவது என்றாகின்றது. அடத்துடன் இளம் பூரணர், பேராசிரியர் கருத்தின் வழி, பாட்டாவது யாப்பமைதியுடன் ஓசை நயமும் உடையதெனக் கொள்ளவாம்.

## உரையாவது பேச்சா?

ஆக, தொல்காப்பியத்தின் வழி, உரையாவது செய்யுள் அல்லாத வேறு என்பதும், அதே போழ்தில் யாப்பமைதி உடைய தென்பதும் வெளிப்படையாதலின், உரையாவது பேச்சு மொழி எனக் கொள்ளுதற்கு வழியில்லை. ஆசிரியர் யாப்பு வழிப்படும் செய்யுளுக்கெனத் தனியோர் இயல்வகுத்து, அதனில் உரையென்பதையும் யாப்பு வழிப்பட்டதாகக் கூறியிருப்பவும், தொல்காப்பியர் காலத்தில் பேச்சு மொழியும் எழுத்து மொழியும் ஒன்றாக இருந்திருக்கலாம்; அக்காலத்திய இலக்கிய மொழிக்கும். பேச்சு மொழிக்கும் பேரளவில் வேறுபாடு இல்லாதிருந்திருக்கலாம் என்றாற் போலும் கருத்துக்கள் எண்ணித்துணியாத மயக்க மொழிகள் - கற்றார் கல்லாதார் அனைவரும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடைவகுத்து, இயலசை, உரியசை எண்ணி, வெண்டளை, கலித்தளை வழுவாது ஏறத்தாழச் செய்யுளியலிற் கூறப்படும் யாப்பின் வழிப்படும் முறையிலே அன்றாடம் தமக்குள் பேசியிருப்பர் என்றாகின்றது. எனவே இக்கருத்துரையைப் பொருளொடு புணரா நகை மொழி என்னும் உரைவகையாகவே கொளவேண்டும்.

ஆக, தொல்காப்பியார்க்கு முன்னிருந்து சங்ககாலம் வரையும் யாப்பு வழிப்பட்டதே உரையென்பது உறுதியாதலின், அக்காலத்திய பேச்சு மொழியும் எழுத்து மொழியும் ஒன்றெனக் கொள்ள வழியில்லை. அன்றியும் அப்பழங்காலத்திய பேச்சு மொழிக்குச் சான்றேதும் இல்லை.

## எழுத்துச் சான்றுகள்

சங்கம் மருவிய காலத்து இலக்கிய வாணரான இள்ங்கோவடிகள் தமது காப்பியம் உரையிட்ட பாட்டுடைச் செய்யுளாலாகிறது என்கிறார். அதனில்

யாப்பமைதியுடைய உரைப்பகுதியும் உண்டு; யாப்பமைதியில்லாத உரைப்பகுதியும் உண்டு.

ஆனால், பல்லவர் காலந்தொட்டுப் பேச்சுமொழி, எழுத்து மொழி, செய்யுள் மொழி மூன்றிற்கும் எழுத்துச் சான்றுகள் கிடைக்கின்றன. இன்றளவும் யாப்புவழிப்படும் செய்யுட்களாலாகும் இலக்கியங்கள் தொடர்தல் செய்யுள் மொழிக்குச் சான்றாகிறது. இலக்கண, இலக்கிய உரைகள் பேச்சும், செய்யுளுமல்லாத எழுத்து மொழிக்குச் சான்றாகின்றன. பல்லவர் காலம் முதலாகக் கிடைக்கப் பெறும் கல் வெட்டுக்கள் அவ்வக்காலத்திய பேச்சு மொழிக்குச் சான்றாகின்றன.

## கல்வெட்டில் பேச்சு மொழி

இதனில் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. கல் வெட்டுக்களில் காணப்படும் திருத்தமற்ற சொல்வடிவங்கள் அனைத்தையும் அக்காலத்திய பேச்சு வடிவங்களாகக் கொள்ளுதல் தகாது. உலகம் என்னும் சொல் கல்வெட்டில் ஒலகம் என வருதல் பேச்சு வழக்கின் பாற்பட்டது. காரணம், இன்றும் பேச்சு வழக்கில் ஒலகம் என்றே அமைகிறது. ஆனால், கல்வெட்டில் நீக்கி என்னும் சொல் நிக்கி - என இருத்தல் கொண்டு நிக்கி என்பதை அக்காலத்திய பேச்சு மொழியாகக் கொள்ளல் முற்றும் பிழையாகும். காரணம், இன்றும் தொடக்கப்பள்ளி மாணவன் நீக்கி என்பதை நிக்கி என எழுதுதல் அன்றாடம் வகுப்பறைக் காட்சியாகிறது. ஆனால் அம்மாணவன் பேசும் போது, நீக்கி - என்றே கூறுகிறான். அவன் நிக்கி என எழுதியதைக் காட்டிப் படிக்கச் சொன்னால், நீக்கி என்றே படிக்கிறான். அஃதாவது, அவன் நீக்கி என எழுதுவதாக நினைத்துத்தான் நிக்கி என எழுதுகிறான். தோப்பு - தேப்பு,குற்றாலம் - குற்றலம், தண்டனை - தெண்டனை என்றாற் போல மாணவர்கள் செய்யும் பிழைகள் நாம் அறியாதனவல்ல. மாணவர் மட்டுமல்ல விளம்பரப் பலகைகளில் இவை போலும் பிழைகள் பலவற்றை அவ்வப்போது நாம் பார்க்கிறோம். பேசும் போது, பலகை என்றே உச்சரித்த ஒருவர், எழுதும் போது பழகை என எழுதியதை நேரடியாகக் கவனித்த பட்டறிவும் உண்டு.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# முனைவர் மு.வ. நூற்றாண்டு : 25.4.2012

(எண்சீர் விருத்தப்பா)

**முனைவர் மு.வ.,பிறப்பு :**

பாலாறு பாய்கின்ற தொண்டைநல் நாடெனப்
பேர்கொண்ட வேலூர்மா., வடஆர்க்கா டந்நாள்,
நூலாறு ஊற்றின்நேர் வரதராசர் பிறந்தார்,
முனிசாமி அம்மாக்கண் ணம்மாள்சீர் பெற்றோர்;
மேலாறு நிகர்பாதை காட்டேல கிரியின்,
மறுபக்கச் சமவெளியின் திருப்பத்தூர் நகரில்,
நாலாறு நன்மைசேர் ஆயிரத்துக் கொள்ளா
யிரப்பன்னி ரண்டு, 'ஏப்ரல்' , இருபதினோ டைந்தில்! (1)

**கல்வி :**

வேலம், வா லாசாவில் தொடக்கநிலைக் கல்வி!
விழைதிருப்பத் தூருயர்நி லைக்கல்வி பெற்றார்!
கோலமயில் போலழகு காட்டும்நம் மொழியில்,
புலவர்தேர் வில்முதன்மை மாநிலத்தே பெற்றார்!
சாலவர லாறுடைய சென்னைப்பல் கலைக்கழ
கத்தினிலே, முதல்முனைவர் தமிழினிலே அவர்தாம்!
தாலசைவாம் மொழிபலவும், பாரதிபோல் கற்றார்!
தனிப்புகழால் உலகநகர் வலம்வரும்பே றுற்றார்! (2)

**பணிகள்:**

தமிழஆசான் நகராட்சி உயர்பள்ளி, பின்னர்
தகைபச்சை யப்பந்கல் லூரிப்பே ராசான்,
தமிழ்த்துறைத்த லைவர்சென் னைப்பல்க லை,' யில்!
தமிழமுதாம் பாலூட்டும் புகழ்ச்சங்க "மதுரை",
இமிழ்கடல்நேர் புகழ்காம ராசர்பேர் இணைத்த
இனியபல்க லைக்கழகின் துணைவேந்தர்! மதிப்பியல்
அமிழ்தின் நேர் தமிழ்ப்பணிக்கோர் அளவில்லை என்பர்!
கலைக்களஞ்சி யப்பணியில் அவர் பங்கும் உண்டாம்!

**நூல்கள்:**

தமிழறிந்த வீடெல்லாம் மு.வ.வின் நூல்கள்!
தாய், குழந்தை வளர்ப்பதற்கும் நூலொன்றை ஈந்தார்!
அமிழ்(து) அகல்வி ளக்கிற்குக் குடியரசுத் தலைவர்
சாகித்ய அகாதெமியின் கரும்பின்நேர் பரிசு!
தமிழரசு மூன்றுநூற்குப் பரிசளிப்பு, முக்கனி!
தமிழ்வளர்ச்சிக் கழகீந்த தறுசுவைநேர் பரிசு!
இமிழ்கடல்சூழ் புவிவாழ்வை இனிதாக்கும் அவர்நூல்
என்பதின்மேல் ஐந்தென்பர்! புகழியம்பும் உலகே! (4)

அன்புடன்,

**புலவர் சி. பாண்டுரங்கன்**, ஆம்பூர்

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/57 July 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.